அலுவலகப பிரதி

# மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
# மற்றும்
# காவல் துறை அதிகாரிகள் மாநாடு




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்

2008, ஜூன் 19, 20 ஆகிய நாட்களில்

ஆற்றிய உரை.

# மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் மாநாடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்
2008 ஜூன் 19,20 ஆகிய நாட்களில்
ஆற்றிய உரை மற்றும் எடுக்கப்பட்ட முடிவுகள்.

வெளியீடு :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

சிறப்பு வெளியீடு எண். 17

தமிழரசு இலவச வெளியீடு

ஜூன் 2008

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
சென்னை – 600 002.

**சென்னை, தலைமைச் செயலகத்தில்**
**19.6.2008 அன்று நடைபெற்ற**
**மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும்**
**காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில்**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**கலைஞர் மு.கருணாநிதி அவர்கள்**
**ஆற்றிய தலைமை உரை.**

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே !

தலைமைச் செயலாளர் அவர்களே !

காவல்துறைத் தலைமை இயக்குநர் அவர்களே !

அரசு உயர் அலுவலர்களே !

மாவட்ட ஆட்சித் தலைவர்களே !

காவல்துறை அலுவலர்களே ! நண்பர்களே !

உங்கள்அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கங்கள்.

தமிழக மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றி, சொன்னதைச் செய்ததோடு மட்டுமல்லாமல் சொல்லாததையும் செய்து மிகச்சிறந்த மனித நேய அரசாகத் திகழ்கிறது தமிழக அரசு. இந்த அரசின் மக்கள் நலத் திட்டங்களின் பயன்கள் அனைத்தையும் உரிய பயனாளிகளுக்குக் கொண்டு சேர்க்கும் பணியில் அல்லும் பகலும் அயராது பாடுபடும் மாவட்ட ஆட்சித் தலைவர்களையும்; மக்களிடம் நட்பு பூண்டு, அவர்களைப் பாதுகாத்திடும்

பெரும்பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ள காவல்துறை அதிகாரிகளையும் ஒருசேர சந்தித்து உரையாடுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த அரசு கொண்டு வந்த மக்கள் நலத் திட்டங்கள் சிலவற்றை முன் மாதிரியாக எடுத்துக் கொண்டு சில மாநிலங்கள் செயல்படுத்தி வருவதை அண்மையில் நீங்கள் ஏடுகளில் படித்திருக்கலாம். குறிப்பாக ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்கும் திட்டத்தை ஆந்திர மாநில அரசு அண்மையில் தொடங்கியிருக்கிறது; இப்படி நம்மை, நம் மாநிலத்தைப் பிற மாநிலங்கள் பின்பற்றுவதற்குக் காரணம், அத்திட்டங்களை வகுத்துத் தந்த இந்த அரசு மட்டுமல்ல; அதனை முறையாக, சரியாக, செம்மையாக நிறைவேற்றி வரும் அரசு அதிகாரிகளான நீங்களும்தான் என்பதை நான் மிக நன்றாக அறிவேன்.

அரசுத் திட்டங்கள், பல துறைகளின் கூட்டு முயற்சியின் மூலம் செயல்படுத்தப்பட வேண்டிய ஒன்றாகும். பாதாளச் சாக்கடைத் திட்டத்தை எடுத்துக்கொண்டால், இதில் நிலம் வழங்குவதற்கு வருவாய்த் துறை, திட்ட அறிக்கை வழங்குவதற்கு குடிநீர் வடிகால் வாரியம், மாசுக் கட்டுப்பாட்டுச் சான்று வழங்குவதற்கு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் என்று பல துறைகள் சம்பந்தப்பட்டுள்ளன. இது போன்ற பெரும் திட்டங்களில் ஒவ்வொரு துறையும் தனித் தனியாகச் செயல்படாமல், அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டால் இத்திட்டங்கள் தாமதப்படாமல், விரைந்து நிறைவேறி மக்களுக்கு நன்மை பயக்கும். இந்த ஒருங்கிணைக்கும் பொறுப்பை நிறைவேற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்களது மாவட்டங்களில் நடைபெறும் பெரும் திட்டங்கள் குறித்து சம்பந்தப்

பட்ட துறைகளுடன் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி, தேவைப்பட்டால் அரசுடன் தொடர்பு கொண்டு தடைகளை விரைவில் தீர்த்து வைத்து முன்னேற்றம் காண வேண்டும். தீர்க்க முடியாத சிக்கல்கள் என நீங்கள் கருதும்பட்சத்தில், எந்த நேரத்திலும் என்னையே நேரடியாகத் தொடர்பு கொண்டு தகுந்த அறிவுரைகளைப் பெறுவதற்கும் தயங்க வேண்டிய அவசியமில்லை.

**சட்டம் ஒழுங்கு நிலை**

தமிழ்நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கு செம்மையாகப் பேணப்பட்டு தமிழகம் அமைதியின் தொட்டிலாகத் திகழ்கிறது என அனைவரும் பாராட்டுகின்றனர். இப்பாராட்டு மேலும் பொலிவுபெற வேண்டுமெனில், கடுங்குற்றம் புரிவோர், கூலிப் படையாகிக் கொடுங் குற்றங்களில் ஈடுபடுவோர், பொதுமக்களை அச்சுறுத்தும் சமூக விரோதிகள் ஆகியோரின் போக்கிற்கு நிரந்தரமாக முற்றுப்புள்ளி வைத்திட காவல் துறையினர் காலதாமதமின்றி சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொண்டு, பொது மக்களிடையே நம்பிக்கையை வளர்க்க வேண்டும் என இத்தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாநிலத்தில் நிலவும் பொது அமைதியைக் குலைத்திடும் தீய நோக்கத்துடன் சில சமூக விரோதிகள், நாடு போற்றும் தலைவர்களின் சிலைகளை அவ்வப்போது சேதப்படுத்தியும் சிதைத்தும் தேவையற்ற சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகளை உருவாக்கி வருகின்றனர். பொதுமக்களின் அமைதியான வாழ்விற்கு எதிராக, இவ்வாறு செயல்படுபவர்களை இனங்கண்டு, விரைவாகவும் உடனடியாகவும் செயல்பட்டு,

அவர்கள் மீது குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ், சட்டப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

கள்ளச்சாராயம் மற்றும் போலி மதுபானங்களைத் தயாரிப்பவர்கள், விற்பவர்கள் மீது தயவு தாட்சண்யமின்றிக் கடும்நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்திட விரும்புகிறேன்.

பெருகிவரும் சாலை விபத்துகளைக் குறைக்கவும், விபத்துகள் நேராவண்ணம் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் சம்பந்தப்பட்ட துறைகள் அனைத்தும் ஒருங்கிணைந்து செயல்பட்டு உயிரிழப்புகள் நிகழ்வதைத் தடுத்திடச் சிறப்பு நடவடிக்கைகளை எடுத்திட வேண்டும்.

காவல் நிலையங்களுக்குப் புகார் அளிக்க வரும் பொதுமக்களைக் கண்ணியமாகவும், மரியாதையுடனும் நடத்திட வேண்டுமென நான் ஏற்கெனவே காவல் துறைக்கு அறிவுரைகள் வழங்கியுள்ளேன். மேலும், முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்வதில் காலதாமதமோ அலைக்கழித்தலோ கூடாது எனவும், அறிவுறுத்தியுள்ளேன். இந்த அறிவுரைகளின்படி, காவல்துறை பொதுமக்களின் உண்மையான நண்பனாகத் திகழ வேண்டும் என்ற எனது அவாவை நிறைவேற்றுவதில் அக்கறையுடனும், ஆர்வத்துடனும் செயலாற்ற வேண்டுமெனக் காவல்துறை அதிகாரிகளிடம் வலியுறுத்திட விரும்புகிறேன்.

சொத்துத் தகராறு, விலை மதிப்பு உயர்ந்துவரும் நில பேரங்கள், நிலமாற்றம் போன்ற உரிமையியல் வழக்குகளிலும், கட்டப்பஞ்சாயத்து போன்ற சட்டத்திற்குப் புறம்பான

செயல்களிலும் காவல்துறையினர் எக்காரணம் கொண்டும் ஈடுபடவே கூடாது எனக் கடந்த காலங்களில் காவல் துறையினரின் உயர் அலுவலர்களின் கூட்டத்தில் கூறியவற்றை நினைவுபடுத்திட விரும்புகிறேன்.

**காவல் கைதி மரணங்கள்**

சட்டத்தின் ஆட்சியும், ஒவ்வொரு தனி மனிதனின் சுதந்திரமும், உரிமைகளும் மக்களாட்சித் தத்துவத்தின் அடிப்படைகளாகும். இவை வலுப்பெற மனித உரிமைகள் எவ்வகையிலும் மீறப்படாமல் காவல் துறையினர் தம்முடைய பணிகளைச் செம்மையாகச் செய்திட வேண்டும். அரசால் வழங்கப்பட்ட அறிவுரைகளைக் காவல் துறையினர் பின்பற்றி; ஒவ்வொருவரும் கடமை உணர்வுடனும், மனித நேய உணர்வுடனும் செயல்பட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

**வகுப்புவாதக் கலவரங்கள்/சாதிக்கலவரங்கள்**

வகுப்புவாதமும் சாதிய உணர்வும் தமிழ் மண்ணிலிருந்து வேரோடு ஒழிக்கப்படவேண்டும் என்ற கொள்கை உணர்வுடன் இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. பிரச்சினை ஏற்படும் போது தொடர்புடைய அனைவரையும் அழைத்துப் பேசி தீர்வு காண்பது, நல்லிணக்கத்தை நிரந்தரமாக உருவாக்கும்.

**அடிப்படைவாதம் மற்றும் தீவிரவாதம்**

வேலையில்லாத் திண்டாட்டம், போதிய கல்வித் தகுதியின்மை ஆகிய காரணங்களால், தடுமாறும் குணம் உடைய,

எளிதில் வயப்படத்தக்க இளைஞர்களையும், பழங்குடி மக்களையும் குறி வைத்து மக்களாட்சியில் நம்பிக்கையில்லாத சில தீவிரவாத அமைப்புகள் தீவிரவாதத்தைத் தமிழ்நாட்டில் வேரூன்ற வைத்து அமைதியைக் குலைக்க முயல்வதாகத் தெரிகிறது. இத்தகைய தீவிரவாத அமைப்புகள் தமிழகத்தில் காலூன்ற எவ்வகையிலும் இடம் கொடுத்திடாமல், காவல்துறை இதனை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கிட வேண்டும்.

**இலங்கை அகதிகள்**

கடந்த பல ஆண்டுகளாக இலங்கையில் நிலவிவரும் இனக்கலவரம் காரணமாக தமிழ்நாட்டிற்கு இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக வரும் நிலை தொடர்கிறது. 31.5.2008 அன்றைய நிலவரப்படி தமிழ்நாட்டிலுள்ள 117 இலங்கை அகதிகள் முகாம்களில் 73 ஆயிரத்து 433 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாகத் தங்கியுள்ளனர். முகாம்களில் உள்ள அடிப்படை வசதிகளைத் தொடர்ந்து நல்ல நிலையில் பராமரிப்பதுடன், சுகாதார வசதிகளை மேம்படுத்திடவும், தங்குமிடங்கள், சாலைகள், மின் வசதி ஆகியவற்றை அவ்வப்பொழுது ஆய்வு செய்து பழுதுகளை நீக்கி முகாம்களை நல்ல நிலையில் பராமரிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றேன்.

அகதிகளாக வாழும் இலங்கைத் தமிழர்களில் சிலர், பல்வேறு ஆவணங்களைச் சட்டத்திற்கெதிரான வழிகள் மூலம் பெற்று தமிழகத்தில் சொத்து வாங்குவதில் ஈடுபடுவதாகத் தகவல்கள் அரசின் கவனத்திற்கு வந்துள்ளன. இவைகளைப் பரிசீலித்து, இந்தியக் குடிமகனாக அல்லாதவர் இவ்வுரிமைகளைத் துய்க்க வழி இல்லை என்பதை நீங்கள் உறுதி

செய்திட வேண்டும். இலங்கைத் தமிழர்களிடம் நாம் பரிவு காட்டும் அதே வேளையில், அகதிகள் என்ற போர்வையில் இந்திய இறையாண்மைக்கு ஊறு விளைவிப்போரை தமிழகத்தில் ஊடுருவ அனுமதிக்கக் கூடாது என்பதில் காவல்துறை மிகவும் விழிப்புடன் செயல்பட வேண்டும்.

**மீனவர்கள் சர்வதேச எல்லையினைக் கடப்பதால் ஏற்படும் பிரச்சினைகள்**

இலங்கைக் கடற்பகுதியை ஒட்டிய வடக்குக் கடல் எல்லையான மன்னார் வளைகுடா, பாக் நீரிணையிலிருந்து திரிகோணமலை வரை உள்ள பகுதி இராணுவம் சார்ந்த பிரச்சினைக்குரிய மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளதாலும், தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தாக்குதலுக்கு உள்ளாவதாலும், இது மாநிலத்தில் தொடர்ந்து நிலவும் சிக்கலாகக் கருதப்படுகிறது. இப்பிரச்சினை குறித்து இந்திய அரசின் வெளியுறவுத் துறை அமைச்சகம் மற்றும் பாதுகாப்பு அமைச்சகத்திடமிருந்து பல்வேறு தகவல்கள் பெறப்பட்டுள்ளன. அவற்றின் அடிப்படையில், நம் மீனவர்களை இலங்கைக் கடற்பகுதிக்குச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தி வருகிறோம்.

சர்வதேசக் கடல் எல்லையைத் தாண்டுவதால் ஏற்படும் அபாயங்கள் குறித்த விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் மீனவர்களிடையே அடிக்கடி மேற்கொள்வதோடு, படகுகளில் செல்லும் மீனவர்கள் அனைவரும் அனைத்து ஆவணங்களையும் எடுத்துச் செல்ல வேண்டும் என அறிவுறுத்தப்பட வேண்டும்.

**முப்படை வீரர்களின் நலன்**

முப்படை வீரர்களின் நிலம், வீடு மற்றும் உற்றார் உறவினரின் நலம் முதலிய தொடர்பான பல்வேறு கோரிக்கைகளை மாவட்ட ஆட்சியர்களும், காவல்துறை கண்காணிப்பாளர்களும், கனிவோடு முன்னுரிமை வழங்கி நிறைவேற்ற வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

**பொது விநியோகத் திட்டம் மற்றும் சிறப்புப் பொது விநியோகத் திட்டம்**

ஏழை எளிய மக்கள் பயன்பெறத்தக்க வகையில் தமிழக அரசு **3.6.2006** முதல் பொதுவிநியோகத் திட்டத்தில் கிலோ அரிசி ஒன்றுக்கு 2 ரூபாய்க்கு வழங்கி வருகிறது. அத்தியாவசியப் பொருள்களின் விலைவாசியைக் கட்டுப்படுத்த **14.4.2007** முதல் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தைத் தமிழக அரசு தொடங்கி செயல்படுத்தி வருகிறது. அத்தியாவசியப் பொருள்களைக் கடத்தும் செயல்களில் ஈடுபடுவோர் மீதும், அதற்கு உறுதுணையாகச் செயல்படும் அலுவலர்கள் மீதும் கடுமையான நடவடிக்கைகள் எடுத்து மாவட்ட நிர்வாகமும், காவல் துறையும் ஒருங்கிணைந்து செயல்பட்டுத் தவறுகள் நிகழாமல் தடுத்திட வேண்டும்.

மேலும், போலி குடும்ப அட்டைகளைக் கண்டுபிடித்து அகற்றிடும் பணியில் மாவட்ட நிர்வாகம் ஈடுபட்டு அவற்றை நீக்கிட தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**இலவச எரிவாயு இணைப்பு மற்றும் எரிவாயு அடுப்பு வழங்குதல்**

எரிவாயு இணைப்பு இல்லாத குடும்பங்கள் பயனடையும் வகையில் இரட்டை அடுப்புகளுடன் கூடிய இலவச எரிவாயு

இணைப்பு வழங்கும் திட்டம் 2006–2007–ல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் இணைப்புகளை உடனுக்குடன் வழங்கிட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு தரிசு நிலம் வழங்கும் திட்டம்**

நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு இலவச நிலம் வழங்கும் திட்டத்தின் கீழ், 31.5.2008 முடிய ஒரு இலட்சத்து 84 ஆயிரத்து 890 ஏக்கர் நிலம், ஒரு இலட்சத்து 56 ஆயிரத்து 974 ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு வழங்கப்பட்ட இலவச நிலத்தினை மேம்படுத்துவதற்காக மே 2008 வரை 13 கோடியே 67 இலட்ச ரூபாய் வேளாண்மைத்துறை மூலமாகச் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், வழங்கப்பட்ட நிலங்களைப் பயன்பாட்டுக்குக் கொண்டுவர மாவட்ட ஆட்சியர்கள் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**வீடற்ற ஏழைகளுக்கு வீட்டுமனை ஒப்படை**

கடந்த ஆண்டு ஜூலைத் திங்கள் 30 மற்றும் 31 ஆகிய நாட்களில் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் 31.3.2008–க்குள் 3 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கிட நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை மூன்று மாதங்களுக்கு முன்பாகவே நிறைவேற்றி சாதனை படைத்த வருவாய்த் துறை அலுவலர்களுக்கும், குறிப்பாக மாவட்ட ஆட்சியர்களுக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2006இல் இந்த அரசு பொறுப்பேற்றபின் 5 இலட்சத்து 40 ஆயிரத்து 421 ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. எனினும், பல இடங்களில் பட்டா மாறுதல், நில உடைமைச் சான்றுகள், பிறப்பு இறப்புச் சான்றுகள் போன்ற பல சான்றுகள் வழங்குவதில் ஏற்படும் தாமதங்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதால், இவை தவிர்க்கப்பட வேண்டும்.

பல துறைகளில் தீட்டப்படும் திட்டங்களுக்கு நிலம் அடிப்படைத் தேவையாக உள்ளது. இந்த நிலத்தை நில எடுப்பு செய்து முடிப்பது வருவாய்த் துறையினரின் முக்கிய பணியாகும். நில எடுப்புப் பணிகள் சரியான நேரத்தில் செய்யப்படாத காரணத்தால் பல பெருந்திட்டங்கள் தாமதப்படுகின்றன. எனவே, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இவை குறித்துத் தனிக் கவனம் செலுத்த வேண்டும்.

**தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்**

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை தமிழகம் மிகச் சிறப்பான முறையில் செயல்படுத்தி உள்ளதற்காகப் பாராட்டைப் பெற்றதோடு, தமிழகத்தின் ஊரகப் பகுதிகளில் வேலைகளுக்கான கூலியாக 712 கோடி ரூபாய்க்கு மேல் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒரு குடும்பத்திற்கு 100 நாட்கள் வேலை வழங்க வேண்டும் என்ற மத்திய அரசின் முன்னோடித் திட்டத்தின் கீழ், இதுவரை 42 இலட்சத்திற்கும் அதிகமான குடும்பங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ், 82 சதவீதத்திற்கும் மேலாக பெண்களும், 56 சதவீதத்திற்கும் மேலாகத் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினரும் பயன் பெற்றுள்ளது, இத்திட்டத்தின் வெற்றிக்குச் சான்றாகும். மாவட்ட

ஆட்சித்தலைவர்கள், வருங்காலங்களிலும் இத்திட்டத்திற்கு அதிக முன்னுரிமை அளித்திட வேண்டும்.

**சமத்துவபுரம்**

சமூக நீதியை மேம்படுத்தவும், தந்தை பெரியார் அவர்களின் சமூக, சமத்துவக் கொள்கைகளைச் செயல்படுத்திடவும் "பெரியார் நினைவு சமத்துவபுரம்" என்ற முன்னோடித் திட்டத்தினைத் தமிழ்நாடு அரசு 1997–1998–ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தி, 2001–ஆம் ஆண்டு வரை மாநில அளவில் 145 சமத்துவபுரங்களை அமைத்துள்ளது. பின்னர் வந்த அரசால் இத்திட்டம் கைவிடப்பட்டது. தற்பொழுது, மேலும் 95 புதிய சமத்துவபுரங்கள் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. சமத்துவபுரங்களை அமைப்பதற்கு உகந்த இடத்தைத் தேர்வு செய்வதிலும், கட்டுமானப் பணிகளிலும், பயனாளிகளைத் தேர்வு செய்வதிலும் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மகளிர் சுய உதவிக் குழுக்கள்**

தமிழக அரசால் 1989 ஆம் ஆண்டு தொலைநோக்குப் பார்வையோடு தொடங்கப்பட்ட மகளிர் திட்டத்தின் கீழ் தற்போது 3 இலட்சத்து 67 ஆயிரத்து 256 மகளிர் சுய உதவிக் குழுக்களில் 59 இலட்சம் பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர். 2006–2007 ஆம் ஆண்டு முதல் சுய உதவிக் குழுக்களை வலுப்படுத்துவதற்காக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

தமிழக அரசு 2008–2009 நிதிநிலை அறிக்கையில் தகுதிவாய்ந்த 1 இலட்சத்து 50 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மானியம் வழங்கிட 150 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. தகுதிவாய்ந்த அனைத்துக் குழுக்களும் இத்திட்டத்தின்மூலம் சுழல் நிதி பெற மாவட்ட ஆட்சியர்கள் ஆவன செய்திட வேண்டும்.

மாநில அளவில் சுய உதவிக் குழுக்களின் வங்கிக் கடன் இணைப்பிற்கு இவ்வாண்டு 1,600 கோடி ரூபாய் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அனைத்து மாவட்ட ஆட்சியர்களும், வங்கியாளர்களுடன் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி, இந்த இலக்கை எய்துவதோடு குழுக்களுக்குத் தொடர் கடன்கள் கிடைப்பதையும் உறுதி செய்திட வேண்டும்.

நடப்பாண்டில், மகளிர் திட்டம் மூலம் ஏழைகள் மற்றும் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் பணிபெறும் பெண் தொழிலாளர்களுக்கு முன்னுரிமை அளித்து 25 ஆயிரம் புதிய சுயஉதவிக் குழுக்களை உருவாக்கிட அரசு திட்டமிட்டுள்ளது. குழுக்கள் அதிகம் அமைக்கப்படாத பகுதிகளைக் கண்டறிந்து புதிய குழுக்களை அமைத்திடவும் நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

**வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்குத் தொழிற்பயிற்சி**

வேலை வாய்ப்பற்ற 25 ஆயிரம் இளைஞர்கள் வேலை வாய்ப்புப் பெற ஏதுவாக அவர்களுக்குத் தொழிற்பயிற்சி அளிப்பதற்காக 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு

தமிழரசு
அலுவலகப் பிரதி

செய்யப்பட்டுள்ளது. இப்பயிற்சியை நல்ல முறையில் வழங்கிட, சிறந்த தொழில் நிறுவனங்களை அடையாளம் கண்டு இளைஞர்களுக்குத் தொழிற்பயிற்சி வழங்கிட மாவட்ட ஆட்சியர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**வாழ்ந்து காட்டுவோம் திட்டம்**

ஏழை எளியோர் மற்றும் நலிவுற்றோரின் வாழ்வை மேம்படுத்திட உலக வங்கி நிதி உதவியுடன் "வாழ்ந்து காட்டுவோம்" திட்டம் **15** மாவட்டங்களில் உள்ள **2,480** ஊராட்சிகளில் செயல்படுத்தப்படுகிறது. திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சியர்கள் தீவிரமாகக் கண்காணித்துத் தரத்திலும், நடைமுறைகளிலும் எவ்விதக் குறைபாடும் இன்றித் திட்டத்தைச் செயல்படுத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்**

தமிழகத்தில் உள்ள **12** ஆயிரத்து **618** கிராம ஊராட்சிகளிலும் ஐந்து ஆண்டுகளில் அடிப்படை வசதிகளை உருவாக்கிட, அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் **2,500** கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், கடந்த இரண்டு ஆண்டுகளில் **5** ஆயிரத்து **74** கிராம ஊராட்சிகளில் **1,025** கோடி ரூபாய் செலவில் **79** ஆயிரத்து **253** பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும், **2,521** கிராம ஊராட்சிகளில் **509** கோடி ரூபாய் செலவில், அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நடப்பாண்டில் செயல்படுத்தப்படுகிறது.

## அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் **2007–2008** முதல் **2010–2011** வரையிலான **4** ஆண்டுகளில் மொத்தம் **561** பேரூராட்சிகளில் செயல்படுத்திட திட்டமிடப்பட்டு, முதல் ஆண்டில் **40** கோடி ரூபாய் செலவில் **140** பேரூராட்சிகளிலும், இரண்டாம் கட்டமாக நடப்பு ஆண்டில் மேலும் **70** கோடி ரூபாய் செலவில் **140** பேரூராட்சிகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தை, நிதிநிலையில் நலிந்த **30** நகராட்சிகளில் நடப்பு **2008–2009**ஆம் ஆண்டில் செயல்படுத்திட முடிவெடுக்கப் பட்டுள்ளது.

எனவே, கிராம ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகளில் அனைத்து அடிப்படை வசதிகளையும் அளிக்க முனையும் இத்திட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட கால அளவுக்குள் அனைத்துப் பணிகளையும் முடித்திடத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

## இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கல்

கடந்த இரண்டு ஆண்டுகளில் **694** கோடி ரூபாய் செலவில் **25** இலட்சத்து **30** ஆயிரம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டு, மூன்றாம் கட்டமாக **750** கோடி ரூபாய் செலவில் **34** இலட்சத்து **25** ஆயிரம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் பணி **16.2.2008**–முதல் தொடங்கி இதுவரை **13** இலட்சத்து **90** ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை எவ்வித புகாருக்கும் இடந்தராமல் விரைந்து விநியோகம் செய்திட ஆவன செய்ய வேண்டும்.

**பள்ளிகளில் கழிப்பறை வசதி**

**18.9.2006** அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டின் தலைமை உரையில் "அடுத்த இரண்டு ஆண்டுகளில் கழிப்பறை வசதி இல்லாத பள்ளிகள் தமிழ்நாட்டில் எங்கும் இல்லை என்ற நிலையை ஏற்படுத்துவோம்" என்று தெரிவித்திருந்தேன். அந்த அறிவிப்பினைச் செயல்படுத்துவது தொடர்பாக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பணிகளை **2008–2009**ஆம் ஆண்டிற்குள் முடித்திட அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆவன செய்திட வேண்டும்.

**தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம்**

வேளாண்மை உற்பத்தியில் **4** விழுக்காடு வளர்ச்சி விகிதத்தை அடையவும், விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தவும், தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தை **185.31** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ள மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. மாவட்ட ஆட்சியர்கள் இந்த நிதியை முழுமையாகப் பயன்படுத்தி மாநிலத்தின் வேளாண் உற்பத்தியையும், விவசாயிகளின் நலத்தையும் பெருக்க வேண்டும்.

**உழவர் சந்தைகள்**

2007–2008ல் 50 உழவர் சந்தைகள் புதிதாக அமைக்கப்படும் என்று அரசு அறிவித்து அவற்றைப் புதிதாகத் தொடங்கிட ஆணைகள் வெளியிடப்பட்டன.

இந்த புதிய உழவர் சந்தைகளை விரைவில் அமைத்திட எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், உழவர் சந்தைகளின் செயல்பாட்டை மேலும் எவ்வாறெல்லாம் சிறப்புற மேம்படுத்திடலாம் என்பது பற்றியும் உரிய ஆலோசனைகளை மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன்.

**நிலத்தடி நீர் செறிவூட்டுத் திட்டம்**

நிலத்தடி நீர் செறிவூட்டுத் திட்டத்தினைத் திறம்படச் செயல்படுத்திட, தகுதியுள்ள அரசு சாரா தொண்டு நிறுவனங்களைத் தெரிவு செய்து, பணிகள் தரம் உள்ளதாகவும், உரிய காலத்தில் செய்து முடிக்கவும் ஏதுவாக, தொடர்ந்து கண்காணித்திட வேண்டும். மேலும், மாநிலங்களுக்குள் ஓடும் நதிகளை இணைக்கும் திட்டத்தின் கீழ் நிலம் கையகப்படுத்த வேண்டிய இனங்களில் சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்களை மாவட்ட ஆட்சியர்கள் அழைத்துப் பேசி எந்தவித இடையூறும் இல்லாமல் நிலங்களை கையகப்படுத்துவதற்கும், திட்டங்களை விரைந்து நிறைவேற்றுவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

**வருமுன் காப்போம் திட்டம்**

“வருமுன் காப்போம் திட்டம்” மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. மூன்று ஆண்டுகளில் 9,000 முகாம்கள் நடத்த

திட்டமிடப்பட்டு இதுவரை 6,773 முகாம்கள் நடைபெற்று உள்ளன. இம்முகாம்களில் ஏறத்தாழ 69 இலட்சம் மக்கள் கலந்து கொண்டு பயனடைந்துள்ளனர். எஞ்சிய இலக்கையும் அடைய தனிக் கவனம் செலுத்துமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மருத்துவமனைகளில் ஆய்வு**

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மருத்துவமனைகளில் அவ்வப்போது ஆய்வுகளை மேற்கொண்டு மருத்துவர்கள் பணியில் இருப்பதையும், உயிர்காக்கும் மருந்துகள் போதுமான அளவில் இருப்பு உள்ளதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

**டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம்**

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம் சிறப்பாகச் செயல்பட்டு அனைவரின் பாராட்டையும் பெற்று வருகிறது. இந்நிதியுதவித் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற கர்ப்பிணிப் பெண்கள் வருமானச் சான்றிதழ் கொண்டு வரவேண்டும் என்ற நடைமுறை இருந்து வந்தது. இந்த நடைமுறையினால் கர்ப்பிணிப் பெண்களுக்கு ஏற்படும் சிரமத்தைத் தடுத்திட வருமானச் சான்றிதழ் கொண்டுவர வேண்டும் என்பதை நீக்கி, கிராம சுகாதார செவிலியர்களின் சான்றுகளின் அடிப்படையிலேயே நிதியுதவியினை வழங்கலாம் என அரசு ஏற்கெனவே அறிவித்துள்ளது. எனவே, இந்தத் திட்டத்தின்கீழ், தாமதமின்றி நிதியுதவி வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

## சத்துணவுடன் வாரம் மூன்று முட்டைகள் வழங்கும் திட்டம்

பள்ளிகளில் குழந்தைகளுக்குச் சத்துணவுடன் வாரம் மூன்று முறை முட்டை வழங்கும் திட்டத்தில் முட்டைகள் முறையாக வழங்கப்படுகிறதா என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் சார்நிலை அலுவலர்கள் நேரடியாக ஆய்வு செய்ய வேண்டும்.

## மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம்

வறுமையில் வாடும் பெற்றோர்கள் தங்கள் பெண்களின் திருமணத்திற்கென நிதியுதவி பெறவும், பெண்களின் கல்வி நிலையினை மேம்படுத்துவதற்காகவும் இவ்வரசால் **3.6.1989**ல் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம் தொடங்கப்பட்டது.

ஏழைப் பெண்கள் **10** ஆம் வகுப்பு வரை கல்வி பயில்வதை ஊக்குவிக்கவும், வறிய நிலையில் உள்ள பெற்றோர்களுக்கு உதவிடும் வகையிலும், **3.6.2006** முதல் இத்திட்டத்தை மீண்டும் செயல்படுத்தி, நிதியுதவி **20.3.2008**லிருந்து **20** ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் நிதியுதவி பெற குடும்ப ஆண்டு வருமானம் **12** ஆயிரம் ரூபாய் என்பது **24** ஆயிரம் ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கு நிதியுதவி தங்குதடையின்றிக் கிடைத்திட மாவட்ட ஆட்சியர்கள் தனிக் கவனம் செலுத்திட வேண்டும்.

**ஆதிதிராவிடர், பழங்குடியினர், சிறுபான்மையினர் உள்ளிட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களுக்கான நலத்திட்டங்கள்**

சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மக்களுக்கு சமூக நீதி வழங்குவது மற்றும் அதிகாரமளிப்பது ஆகியவற்றில் இந்த அரசு எப்பொழுதும் கவனம் செலுத்தி வந்துள்ளது. ஆதிதிராவிடர், பழங்குடியினர், சிறுபான்மையினர் உள்ளிட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கான பல்வேறு நலத் திட்டங்களின் பயன்கள், குறிப்பாக கல்வி உதவித் தொகை, இலவச பாடப் புத்தகங்கள், சீருடைகள் மற்றும் இலவச மிதிவண்டிகள் உரிய காலத்தில் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படுவதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கண்காணிக்க வேண்டும்.

அரசு மாணவர் விடுதிகளில் தங்கிப் பயில்வோருக்கான உணவுக் கட்டணம் கடந்த இரண்டு ஆண்டுகளில் கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது. மாணவ, மாணவியருக்குத் தரமான உணவு வழங்கப்படுவதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உறுதி செய்திட வேண்டும். அரசு மாணவர் விடுதிகளை அடிக்கடி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நேரில் ஆய்வு செய்து விடுதி மற்றும் பள்ளிக் கட்டடங்களின் உறுதித் தன்மையைச் சரிபார்த்து, பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். அதே போன்று புதிய விடுதிகளைக் கட்டுவதற்குத் தேவைப்படும் நிலத்தைக் கையகப்படுத்தும் பணிகளையும் துரிதப்படுத்திட வேண்டும்.

**நல வாரியங்கள்**

விவசாயத் தொழிலாளர் நல வாரியம், கட்டுமானத் தொழிலாளர் நலவாரியம், உடலுழைப்புத் தொழிலாளர் நலவாரியம்

உட்பட 23 அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியங்களில் உறுப்பினர்கள் சேர்க்கப்படுவதுடன், இந்த வாரியங்கள் மூலம் தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய பயன்கள் உடனுக்குடன் கிடைக்க ஆவன செய்வதிலும் மாவட்ட ஆட்சியர்கள் தனி கவனம் செலுத்திட வேண்டும்.

**பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN)**

தமிழக அரசு மைய அரசுடன் இணைந்து தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN) என்ற முக்கிய இணைப்பை (Backbone Connectivity) உருவாக்கி, அதன்மூலம் அனைத்து மாவட்டங்கள், வட்டத் தலைமையிடங்கள், வட்டாரத் தலைமையிடங்கள் ஆகியவை இணைக்கப்பட்டுள்ளன. இந்தியாவிலேயே முதன்முறையாக இத்திட்டத்தினைச் செயல்படுத்திய மாநிலம் தமிழ்நாடுதான் என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடையும் அதே தருணத்தில் தமிழகத்தின் கிராமப்புற சேவைகள் கணினிமயமாவதை விரைவுபடுத்துவது உங்கள் கடமை என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**சாலைகள் பராமரிப்பு**

இந்த அரசு பொறுப்பேற்றபின் சாலை மேம்பாட்டிற்காக ஒவ்வொரு ஆண்டும் நிதி ஒதுக்கீட்டினை அதிகரித்து வருகிறது. நடப்பு நிதியாண்டில் சாலைப் பராமரிப்புக்காக 849 கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கீடு செய்து, அதில் நெடுஞ்சாலைத் துறைக்கு 746 கோடி ரூபாயும், ஊரக வளர்ச்சித் துறைக்கு 104 கோடி ரூபாயும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேலும், திட்டப் பணிகளுக்கும், சாலைப் பராமரிப்புப் பணிகளுக்குமான ஒதுக்கீட்டினை அதிகரித்ததன் மூலம் தமிழ்நாட்டிலுள்ள அரசுச் சாலைகளைச் சுழற்சி முறையில் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கும் வாய்ப்பினை இவ்வரசு உருவாக்கியுள்ளது. இதனைப் பயன்படுத்தி சாலைகளை நன்கு பராமரிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**அரசின் நலத் திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு**

தமிழக அரசு நாட்டிற்கே முன்னோடியாக உருவாக்கியுள்ள திட்டங்களினால் விளைந்துள்ள நன்மைகளைப் பயனாளிகள் தாமே முன்வந்து விவரிப்பது போன்ற செய்திக் கட்டுரைகளை முக்கிய செய்தித்தாள்களில் வெளிவரச் செய்வதற்கு, மாவட்டந்தோறும் இயங்கும் மக்கள் தொடர்பு அலுவலகத்தை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

**தமிழ் ஆட்சி மொழித் திட்டம்**

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்பதை மொழிக் கொள்கையாகக் கொண்டுள்ள இந்த அரசின் ஆட்சி மொழித் திட்டச் செயலாக்கத்திற்கு ஒத்துழைப்பு நல்கும் வகையில் நடத்தும் ஆய்வுக் கூட்டங்களிலும் கடிதப் போக்குவரத்துகளிலும் தமிழையே பயன்படுத்த வேண்டும்.

**பால் கொள்முதல்**

கடந்த ஆண்டு மே திங்களுடன் ஒப்பிடுகையில், 11 மாவட்ட ஒன்றியங்களில் பால் கொள்முதலில் மிகுந்த

பின்னடைவு ஏற்பட்டுள்ளது. தனி அலுவலர் என்ற முறையில் மாவட்ட ஆட்சியர்கள் இந்தக் குறை களையப்பட தனிகவனம் செலுத்துதல் வேண்டும். பால் ஒன்றியத்தால் பால் கொள்முதல் வழித்தடங்களை மற்ற மாவட்டங்களுக்கு விரிவாக்கும் பொருட்டு மாவட்ட ஆட்சியர்கள் பிற மாவட்ட ஆட்சியர்களின் ஒத்துழைப்பினைப் பெறவேண்டும்.

**கால்நடை பாதுகாப்புத் திட்டம்**

நடப்பு ஆண்டில் **5,500** கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்கள் **2.49** கோடி ரூபாய் திட்ட ஒதுக்கீட்டில் நடத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்திட ஏதுவாக முகாம் நடைபெறும் கிராமங்களை மாவட்ட ஆட்சியர்கள் தேர்வு செய்திட வேண்டும்; சில முகாம்களுக்குச் சென்று முகாம்கள் சரிவர நடைபெறுகிறதா என்பதையும் உறுதி செய்திட வேண்டும்.

திட்டப் பணிகளின் பயன்கள் மக்களை முழுமையாகச் சென்றடைய வேண்டுமெனில் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் அதிக அளவில் களப்பணிகளை ஆய்வு செய்து, தீவிரமாகக் கண்காணித்திட வேண்டும். அப்போது தான் அரசுப் பணிகள் செம்மையாக நடைபெறும்.

அதுமட்டுமல்லாமல், மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் மக்களால் எளிதில் அணுகத்தக்கவர்களாகவும், மக்களுடைய குறைகளை, பிரச்சினைகளை கனிவுடன் அணுகி உடனுக்குடன் தீர்க்கும் தன்மை உடையவர்களாகவும் இருக்க வேண்டும். ஏழை எளிய

மக்களுக்கும், அரசுக்கும் இடையே ஒரு நல்லுறவுப் பாலமாக நீங்கள் திகழ வேண்டும் என்பதே என்னுடைய அவா.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பொன்மொழி ஒன்றை இங்கே குறிப்பிட்டு எனது உரையை நிறைவு செய்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

> "கடலுக்காக அல்ல; கடற்கரையிலே இருக்கின்ற மக்களுக்காக காற்றடிக்கின்றது. விளக்கு ஏற்றினால், தன் எதிரிலே இருக்கின்ற இருட்டைப் போக்க ஒளி பயன்படுமே தவிர அதன் அடியில் இருக்கின்ற நிழலைப் போக்கமுடியாது! அது போல, நம்மிடத்திலே இருக்கின்ற திறமை நமக்காக அல்ல; நாட்டு மக்களுக்காக! அந்த மக்களுக்காக! அந்த வகையில் நாம் ஒவ்வொருவரும் பணியாற்றுவோம்!"

எனவே, துறைச் செயலாளர்கள், காவல் துறை உயர் அலுவலர்கள், துறைத் தலைவர்கள், மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் ஏனைய அரசுப் பணியாளர்கள் அனைவரும் நாட்டு மக்களுக்குப் பயன்படும் வகையில் தங்கள் பணியை ஆற்றிட வேண்டுமென கேட்டுக் கொண்டு, இந்த மாநாட்டைத் தொடங்கி வைத்து, உங்கள் கருத்துகளை வரவேற்று அமைகிறேன்.

★ ★ ★

**மாண்புமிகு முதலமைச்சர்**

**கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் தலைமையில் 19.6.2008 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகளின் முதல்நாள் மாநாட்டில் கலந்தாலோசனைக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் :**

முதலில் தமிழக அரசு செயல்படுத்திவரும் மிகப்பெரிய திட்டங்கள் அதாவது "மெகா" திட்டங்கள் குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தைப் பொறுத்தவரை, ஏற்கெனவே தருமபுரியில் 'திட்ட அலுவலகம்' தொடங்கப்பட்டுள்ள நிலையில், ஜப்பான் வங்கியின் ஒப்புதலுடன் இறுதி செய்யப்பட்டுள்ள கால அட்டவணைப்படி மற்ற அனைத்துச் செயல்பாடுகளையும் மேற்கொண்டு திட்டத்தை நிறைவேற்றுவதெனவும்;

இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தை, 2009 ஏப்ரல் மாதத்திற்குள் நிறைவேற்றி புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்ட மக்களின் பயன்பாட்டுக்கு அர்ப்பணிப்பதென்றும்;

கோவையில் அமையவுள்ள உலகத் தரத்திலான மத்தியப் பல்கலைக் கழகத்திற்குத் தேவையான நிலத்தையும்; திருச்சியில் அமையவுள்ள மேலாண்மைக்கான மத்தியப் நிறுவனத்திற்கு (I.I.M.) தேவையான நிலத்தையும் மிக விரைவாகத் தேர்வு செய்து மத்திய அரசுக்குத் தெரிவிப்பதென்றும்;

திருவாரூரில் அமையவுள்ள மத்தியப் பல்கலைக் கழகத்தை இந்த ஆண்டே தொடங்கி நடத்துவதற்கு மத்திய அரசு முன்வந்துள்ள நிலையில், நிரந்தரக் கட்டடங்கள்

கட்டப்படுவதற்கு முன்பு தற்காலிகமாக கட்டட வசதிகளை உடனடியாக ஆய்வு செய்து மத்திய அரசுக்கு அறிவிப்பதென்றும்;

பெரம்பலூர், விழுப்புரம், திருவாரூர், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் அமையவுள்ள மருத்துவக் கல்லூரிகளுக்கான நிலங்களை உடனடியாக ஒப்படைக்க உரிய நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சியர்கள் மேற்கொள்வதென்றும்;

சென்னை அரசு பொது மருத்துவமனையில் நெரிசலைக் குறைக்கும் வகையில், பெண்களுக்கான சிறப்பு மருத்துவமனை, முதியோர்களுக்கான சிறப்பு மருத்துவமனை, வெளிநோயாளிகளுக்கான சிறப்புப் பிரிவு, சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை ஆகிய மருத்துவமனைகளை பழைய மத்திய சிறை இருந்த இடத்தில் 10 ஏக்கர் பரப்பளவில் அமைப்பதற்கான நடவடிக்கைகளை விரைவு படுத்துவதென்றும்; ஸ்டான்லி மருத்துவக் கல்லூரிக்கான புதிய கட்டட வசதிகளைப் பொதுப்பணித் துறைக்குரிய நிலத்தில் விரைவாக செய்து முடிப்பதென்றும்;

ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமையவுள்ள புதிய சட்டப்பேரவை – தலைமைச் செயலக வளாகத்திற்கான கட்டடப் பணிகளை 2008, அக்டோபர் மாதத்தில் தொடங்கி, 2010 மார்ச்சுக்குள் நிறைவு செய்வதென்றும்;

சென்னை – கோட்டூர்புரத்தில் 8 ஏக்கர் நிலப்பரப்பில் 100 கோடி ரூபாய் செலவில் அமையவுள்ள உலகத் தரத்திலான மாநில நூலகத்திற்குரிய கட்டடப் பணிகளை 2008, அக்டோபர் மாதத்தில் தொடங்கி, 2010 ஏப்ரல் மாதத்திற்குள் முழுமை செய்வதென்றும்;

சென்னையில் 100 கோடி ரூபாய் செலவில், 358 ஏக்கர் பரப்பளவில் அமையவுள்ள சுற்றுச் சூழல் அம்சங்களை அடிப்படையாகக் கொண்ட உலகத் தரத்திலான 'அடையாறு பூங்கா' அமைப்புப் பணிகளை 2010, டிசம்பர் மாதத்திற்குள் நிறைவு செய்வதென்றும்;

சென்னை, அண்ணா மேம்பாலத்திற்கு அருகில் 20 ஏக்கர் நிலப்பரப்பில் உலகத் தரம் வாய்ந்த தாவரவியல் பூங்கா அமைப்பதற்கான தொடக்க நிலைப் பணிகளை உடனடியாக மேற்கொள்வதென்றும்;

மெரினா கடற்கரை அழகுபடுத்தும் திட்டத்தையும், எலியட்ஸ் கடற்கரை அழகுபடுத்தும் திட்டத்தையும் 2009 ஜனவரி மாதத்திற்குள் நிறைவேற்றுவதென்றும்;

சென்னை விமான நிலைய விரிவாக்கப் பணிகளையும், சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கான பணிகளையும் குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவு செய்வதற்கேற்றபடி விரைவுபடுத்துவதென்றும்; முடிவுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

சட்டம் – ஒழுங்கு சீராகப் பராமரிக்கப்பட்ட போதிலும், இதுவரை கண்டுபிடிக்கப்படாத கொடுங்குற்றங்களின் எண்ணிக்கையை வெகுவாகக் குறைத்திட – காவல்துறை கண்காணிப்பாளர்கள் புலனாய்வு நடவடிக்கைகளை நேரடியாக மேற்பார்வையிட்டு, குற்றவாளிகளை சட்டத்தின் பிடிக்குள் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டுமென்றும்;

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நில ஆக்கிரமிப்புகள் மற்றும் சொத்து சம்பந்தப்பட்ட வழக்குகளில், காவல்துறை எந்த

அளவுக்கு தலையிட வேண்டுமென்று வரையறை செய்திடவும், அந்த வழக்குகளை பாரபட்சமின்றி கையாளும் முறை பற்றியும், அவை தொடர்பான விசாரணைகளைக் காலதாமதமின்றி முடித்திடவும் கூடுதல் காவல்துறைத் தலைவர் ஒருவர் தலைமையில் குழு ஒன்றினை அமைத்து, அக்குழுவின் பரிந்துரைகளின்படி தொடர் நடவடிக்கைகளை எடுப்பதென்றும்;

தீவிரவாத சக்திகளின் செயல்பாடுகளை முளையிலேயே கிள்ளியெறியத் தேவையான சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, இதனை ஒரு சமூக பொருளாதார பிரச்சினையாக அணுகி, அதனடிப்படையில் சிறப்பு வளர்ச்சித் திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்துவதென்றும்;

தமிழ்நாட்டிற்கு அகதிகளாக வந்து அரசு ஆதரவில் வாழ்ந்து வருபவர்களைத் தவிர; சட்டரீதியான ஆவணங்கள் எதுவுமின்றி இருக்கும் வெளிநாட்டினரை ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் வெளியேற வேண்டுமென்று விளம்பரப்படுத்தி, அதற்குப் பிறகும் வெளியேறாமல் இங்கே இருப்பவர்கள்மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும்;

சாதி மற்றும் மதத்தின் பெயரால் கலகம் விளைவிப் பவர்கள் மீதும், கலகத்தைத் தூண்டுபவர்கள் மீதும் குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் தயவுதாட்சண்யமின்றி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும்;

கடலோர மாவட்டங்களின் மாவட்ட ஆட்சியர்களும், காவல்துறை கண்காணிப்பாளர்களும் தங்கள் பகுதியில் உள்ள மீனவர்கள் சர்வதேச எல்லையைக் கடந்து சென்று

மீன்பிடிப்பதால் ஏற்படும் ஆபத்துகளை விளக்கி, அவர்கள் அப்படிச் செய்யாதவாறு எச்சரிக்க வேண்டுமென்றும்; படகுகள் பதிவு செய்வதை விரைவில் முடிக்க வேண்டுமென்றும்; தனியார் டீசல் பங்க்குகள் மூலமாக வழங்கப்படும் மானிய விலை டீசல் குறித்து பங்க்குகளைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டுமென்றும்;

வாகனங்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு, பாதுகாப்பான சாலைப் பயணத்திற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மாவட்ட ஆட்சியர்களும், காவல்துறை அலுவலர்களும் இணைந்து மேற்கொள்ள வேண்டுமென்றும், குடித்துவிட்டு வாகனம் ஓட்டுவோர், வேகக் கட்டுப்பாட்டை மீறுவோர் ஆகியோர்மீது கடுமையான குற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும்; சாலை விபத்துகளைக் குறைக்கும் நோக்கத்தில் மாவட்டங்களில் உள்ள சாலைச் சந்திப்புகளிலும் மற்றும் மக்கள் அதிகமாக நடமாடும் பகுதிகளிலும் தேவையான அளவுக்கு விளக்குகளை அமைப்பது, வேகத் தடைகளை ஏற்படுத்துவது, சாலை விதிகளைப் பின்பற்றுவதற்கான எச்சரிக்கைப் பலகைகளை அமைப்பது போன்ற நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சியர்கள் சம்பந்தப்பட்ட துறைகளோடு இணைந்து மேற்கொள்ள வேண்டுமென்றும்; போக்குவரத்துக்குப் பயன்படும் சாலை ஓரங்களிலுள்ள ஆக்கிரமிப்புகளைப் பாகுபாடின்றி அகற்றிட வேண்டு மென்றும்;

பள்ளிக் குழந்தைகளை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் முறையாகப் பராமரிக்கப்படுகின்றனவா என்றும், வாகன ஓட்டுநர்கள் முறையாகப் பயிற்சி பெற்றவர்களாகவும் உரிமம் பெற்றவர்களாகவும் உள்ளனரா என்றும், வாகனங்களில்

அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கைக்குள் குழந்தைகளை ஏற்றிச் செல்கின்றனரா என்றும் காவல் துறை கண்காணிப்பாளர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்.

மாநிலத்தின் எல்லையோர மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள சோதனைச் சாவடிகள் மூலமாக உணவுப் பொருள்களின் போக்குவரத்தைத் தீவிரமாகக் கண்காணித்து, உணவுப் பொருள்களைக் கடத்துவோர்மீது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் – முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

★ ★ ★

## மாண்புமிகு முதலமைச்சர்
## கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் தலைமையில் 20.06.2008 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகளின் இரண்டாம் நாள் மாநாட்டில் கலந்தாலோசனைக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள்:

அரிசி போன்ற அத்தியாவசியப் பொருள்களையும், சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் துவரம்பருப்பு, உளுந்தம் பருப்பு, பாமாயில், செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு போன்ற பொருட்கள் எல்லா நியாய விலைக் கடைகளிலும் தொடர்ந்து முழுமையாகக் கிடைப்பதை உறுதி செய்வதென்றும்; சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் பொருள்களைப் பற்றி பொதுமக்கள் தெரிந்து கொள்ளும் வண்ணம் விளம்பரப்படுத்துவதென்றும்; கிடங்குகளிலிருந்து உணவுப் பொருள்களை நியாய விலைக் கடைகளுக்கு எடுத்துச் செல்லும் பணியை பிற்பகல் இரண்டு மணிக்குள் செய்து முடிப்பதென்றும்; உணவுப் பொருள் வழங்கு துறையில் உள்ள 275 காலிப் பணியிடங்களை இன்னும் இரண்டு வார காலங்களுக்குள் நிரப்புவதென்றும்; எரிவாயு இணைப்புகள் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ள ஒருசில மாவட்டங்களில் அவற்றை உடனடியாக வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ் காலாண்டு நிதிக் கட்டுப்பாட்டினை அரசு தளர்த்தி உள்ளதால் – தேர்ந்தெடுக்கப்படும் பயனாளிகளுக்கு நிதிஉதவி கால தாமதமின்றி கிடைத்திடச் செய்வதென்றும்;

பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளான ஜூலை 15ஆம் நாளை 'கல்வி வளர்ச்சி நாளாகக்' கொண்டாட அரசு சட்டம் நிறைவேற்றியுள்ளதைத் தொடர்ந்து, அன்றைய தினம் தமிழகத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் விழாக்களுக்கு ஏற்பாடு செய்வதென்றும்; சத்துணவுத் திட்டத்திற்கான முட்டைகளை வாங்குவதில் விலை மற்றும் தரக்கட்டுப்பாட்டினை உறுதி செய்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.

இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ் தொலைக்காட்சிப் பெட்டிகள் மாவட்டங்களுக்கு வந்தவுடனேயே, பொதுமக்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்றும்; தொலைக்காட்சிப் பெட்டிகளின் செயல்பாடுகள் குறித்து பொய்ப் பிரச்சாரங்கள் வெளிவரும்போது அவைபற்றி உடனடியாகத் தீர விசாரித்து, வதந்திகள் பரவாதவண்ணம் அவற்றை முளையிலேயே கிள்ளி எறியத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வ தென்றும்; இலவச வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் வெளிச்சந்தையில் விற்கப்படுவதாக புகார்கள் வரும்போது அவற்றின்மீது உடனடியாக தீவிரமான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும்; கோவை, மதுரை—இலந்தைகுளம், மதுரை—வடபழஞ்சி, சேலம், திருச்சி, நெல்லை, ஒசூர் ஆகிய இடங்களில் அமையவுள்ள தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்களுக்கான ஏற்பாடுகளைச் செய்வதில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முழு ஒத்துழைப்போடு ஈடுபாடு காட்டுவதென்றும்; ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் மாணவர்களுக்குத் தகவல் தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கும் திட்டத்தில் மாவட்ட ஆட்சியர்கள் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு,



தமிழரசு
அலுவலகப் பிரத

அதனை வெற்றிபெறச் செய்வதென்றும்; ஜூலை 15ஆம் நாள் முதல் மாவட்டங்களில் பணி தொடங்கவுள்ள அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேஷன் செயல்பாடுகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தேவையான உதவிகளைச் செய்து முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

செலவைக் குறைத்து, உற்பத்தியை அதிகரிக்கும் 'செம்மை நெல்' சாகுபடித் திட்டத்தை ஒவ்வொரு மாவட்டத்திலும் வெற்றிகரமாக நிறைவேற்றுவதென்றும்; விவசாயிகளுக்குத் தேவையான உரம், சான்றிதழ் செய்யப் பட்ட விதைகள், கூட்டுறவுக் கடன் வசதிகள் ஆகியவற்றை உரிய நேரத்தில் தேவையான அளவுக்கு வழங்குவதில் சிறப்புக் கவனம் செலுத்துவதென்றும்; கழக ஆட்சியில் ஏற்கெனவே உருவாக்கப்பட்ட 103 உழவர் சந்தைகளை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் புதுப்பித்து முழுமையாகச் செயல்பட ஏற்பாடு செய்வதென்றும்; புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள 50 உழவர் சந்தைகளை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் தொடங்கி செயல்பாட்டுக்குக் கொண்டு வருவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

கழக அரசின் திருப்புமுனைத் திட்டமான அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ், (அ) நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டாயப் பணிகளில் ஒருசில மாவட்டங்களில் பின்னடைவு காணப்படுவதால் அவற்றை விரைவாகத் தவிர்த்து, இலக்கினை முழுமையாக அடைவ தென்றும்; (ஆ) ஒதுக்கப்பட்டுள்ள நிதியினை முழுமை யாகச் செலவு செய்வதென்றும்; தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் 13.5.2006 வரை, அதாவது கழக அரசு

பொறுப்பேற்கும்வரை 3 கோடி ரூபாய் மட்டுமே செலவழிக் கப்பட்டிருந்த நிலையில், கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு ஜனவரி 2007இல் செலவழிக்கப்பட்ட தொகை 110 கோடி ரூபாயாகவும், ஜனவரி 2008இல் 562 கோடி ரூபாயாகவும், 31.5.2008 இல் 711 கோடி ரூபாயாகவும் உயர்ந்து வருவதை கருத்தில்கொண்டு, அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை கூடுதல் முனைப்புடன் செயல்பட்டு எய்துவதென்றும்; 1989ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தருமபுரி மாவட்டத்தில் கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட சுயஉதவிக் குழு இயக்கத்தின் கீழ், 30.4.2008 வரை 51 இலட்சம் மகளிரை உறுப்பினர்களாகக் கொண்ட 3 இலட்சத்து 68 ஆயிரம் சுயஉதவிக் குழுக்கள் இயங்கிவரும் நிலையில், அனைத்துத் தகுதி வாய்ந்த சுயஉதவிக் குழுக்களுக்கும் இவ்வாண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 150 கோடி ரூபாய் சுழல் நிதியை வழங்கு வதை மாவட்ட ஆட்சியர்கள் தீவிரமாகக் கண்காணிப்ப தென்றும்; மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கிகள் வழங்கும் மறுகடன் அளவினைக் கண்காணித்து, வங்கிக் கடன் இலக்கினை முழுமையாக அடைவதென்றும்; புதியதாக அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள பெரியார் நினைவு சமத்துவபுரங்களை இதுவரை சமத்துவபுரம் அமைக்கப்படாத வட்டாரங்களில் இடம் தேர்வு செய்து உருவாக்கிட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும், மாவட்டத் தலைநகரங்கள் அல்லாத 22 பிற நகரங்களிலும் செயல் படுத்தப்பட்டு வரும் பாதாள சாக்கடைத் திட்டங்களுக்கான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைப்பதற்குத்

தேவையான நிலங்களை விரைவாகத் தேர்வு செய்வதென்றும்; பாதாள சாக்கடைத் திட்டங்கள் முடிக்கப்பெற்று பயன்பாட்டில் இருக்கும் நகரங்களில் வீட்டு இணைப்புகள் வழங்கப்படுவதை விரைவுபடுத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு தரிசு நிலம் வழங்கும் திட்டத்தின் கீழ் **30.5.2008** வரையில் **1** இலட்சத்து **56** ஆயிரத்து **974** ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு **1** இலட்சத்து **84** ஆயிரத்து **890** ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்டுள்ள இந்த நிலங்கள் தொடர்பாக வருவாய் ஆவணங்களில் உரிய மாற்றம் செய்வது, பயனாளிகள் தொடர்ந்து ஒப்படை செய்யப்பட்ட நிலங்களை அவர்கள் வசமே வைத்திருப்பதை உறுதி செய்வது மற்றும் அந்நிலங்களை முழுமையாகப் பயன்படுத்த ஏதுவாக விவசாயத்திற்கேற்றவாறு மேம்படுத்தி விளைச்சலைப் பெருக்குவது போன்றவற்றிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தேவையான ஏற்பாடுகளைச் செய்வதென்று முடிவு செய்யப்பட்டது. கழக அரசு பொறுப்பேற்ற பின்னர், இது வரை **5** இலட்சத்து **40** ஆயிரத்து **421** ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்தப் பணியினைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு தற்போது நடைபெற்று வரும் நத்தம் நில அளவை, நகர்ப்புற நில அளவை மற்றும் மறு நில அளவைத் திட்டங்களை விரைவுபடுத்தி வீட்டுமனை வழங்கத் தகுதியான நிலங்களை கண்டறிவதென்று முடிவு செய்யப்பட்டது. தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இதுவரை **1** கோடியே **67** இலட்சத்து **52** ஆயிரத்து **26** பேர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களுள் **2** இலட்சத்து **84** ஆயிரத்து **102** பேருக்கு **155** கோடியே

**30** இலட்சத்து **44** ஆயிரத்து **499** ரூபாய் உதவித் தொகையாக வழங்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி கோரி வரும் மனுக்களின் மீது **30** நாட்களுக்குள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும்; தகுதியான பயனாளிகளுக்கு எந்தவிதத் தடையுமின்றி உடனடியாக நிதியுதவி வழங்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

நிலத்தடி நீர் இருப்பினை அதிகப்படுத்துவதற்காக அரசு அறிவித்துள்ள நீரோடைகளில் தடுப்பணைகள் அமைக்கும் திட்டத்தினை விரைந்து முடித்திட ஏதுவாக சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் கலந்தாலோசித்துத் தேவையான தகவல்களைத் திரட்டி இதற்கான நிதியைப் பெற்று இத்திட்டத்தை மாவட்ட ஆட்சியர்கள் செம்மையாக நிறைவேற்றிட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

ஏழை எளிய மக்களுக்குத் தரமான மருத்துவ சிகிச்சை அளிக்கும் சிறப்புத் திட்டமான "வருமுன் காப்போம்" திட்டத்தின் கீழ் **9,000** முகாம்கள் நடத்தத் திட்டமிடப்பட்டு இதுவரை **6,773** முகாம்கள் நடத்தப்பட்டுள்ள நிலையில், எஞ்சிய **2,227** முகாம்களையும் இந்த ஆண்டு இறுதிக்குள் நடத்துவதென்றும்; இந்த முகாம்களுக்கு சிறப்பு மருத்துவர்கள் வந்து பொதுமக்களைப் பரிசோதனை செய்வதை உறுதி செய்வதென்றும்; ஊனமுற்றவர்களுக்கு முகாம்களிலேயே சான்றிதழ்கள் வழங்குவதென்றும்; குறிப்பிட்ட சில காலங்களில் பரவிடும் சில நோய்களைத் தடுப்பதற்கு எல்லாவித முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்வதென்றும்; டாக்டர் முத்துலட்சுமிரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் கிராம சுகாதார செவிலியர்களின் பரிந்துரையின் அடிப்படையில்

வருமானச் சான்றிதழ் இன்றி காலதாமதத்தைத் தவிர்த்து நிதியுதவியை வழங்குவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

கிராமப் பகுதி மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள கால்நடைப் பாதுகாப்புத் திட்டம் நடப்பாண்டிலும் தொடர்ந்து சிறப்பாக நடைபெற, மாவட்ட ஆட்சியர்கள் முகாம்கள் நடத்த தகுந்த கிராமங்களை கவனமாகத் தேர்வு செய்ய வேண்டுமென்றும்; முகாம்களுக்குத் தேவையான மருந்துகள் இருப்பில் உள்ளதா என்று சரிபார்க்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ மாணவியர்க்கும், பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையின மாணவ மாணவியர்க்கும் கல்வி உதவித் தொகை, பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை, இலவச பாடப் புத்தகங்கள், இலவச சீருடைகள், ப்ளஸ் 1 பயிலுவோருக்கு இலவச மிதிவண்டிகள் ஆகியவற்றை காலத்தே வழங்க உரிய நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சியர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

“அனைவருக்கும் கல்வி” திட்டத்தின் கீழ் மாவட்டங்களில் நடைபெறும் பள்ளி வகுப்பறைகள், கட்டடங்கள் உள்ளிட்ட கட்டுமானப் பணிகளைத் தரமாகவும், விரைவாகவும் நிறைவேற்றிட வேண்டுமென்றும்; செயல்வழிக் கற்றல் நடைபெறும் பள்ளிகளை மாவட்ட ஆட்சியர்கள் ஆய்வு செய்ய வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

சாலை, பாலங்கள் பராமரிப்புப் பணிகளைத் துரிதமாகவும், தரமா்கவும் செய்வதை மாவட்ட ஆட்சியர்கள் கண்காணிக்க

வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. நில எடுப்புப் பணிகள் மற்றும் சாலை அகலப்படுத்தும் பணிகளில் காலதாமதம் தவிர்க்கப்படவேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

அமைப்புச் சாரா தொழிலாளர்களுக்கான நல வாரியங்கள் நடைமுறைப்படுத்தி வரும் நலத் திட்டங்களை மாவட்ட ஆட்சியர்கள் காலமுறைப்படி மாவட்ட குழுக் கூட்டங்களில் ஆய்வு செய்வதென்றும்; ஒரே நல உதவியைப் பல்வேறு வாரியங்களில் வழங்குதல், ஒருவரைப் பல்வேறு வாரியங்களில் பதிவு செய்தல் போன்ற குறைபாடுகளைத் தவிர்ப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

தமிழ் ஆட்சி மொழிச் செயலாக்கத்தை மேலும் முனைப்புடன் நடைமுறைப்படுத்துவதென்றும்; பொது மக்கள் அரசின் திட்டங்களையும், ஆணைகளையும் அறியும் வண்ணம் பதிவு செய்யப்படும் அனைத்தையும் தமிழிலேயே அமைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரையினை ஏற்று – வாய்ப்பு வசதியற்று திருமணம் ஆகாமலே ஐம்பது வயதை எட்டி – உழைத்து சம்பாதித்து வாழ்க்கை நடத்த இயலாத ஏழையெளிய மகளிருக்கு – முதியோர், விதவைகள், கணவனால் கை விடப்பட்ட பெண்களுக்கு வழங்குவதைப் போல – மாதந்தோறும் உதவித் தொகையாக 400 ரூபாய் வழங்கப்படும் என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டிலேயே ஆணையிட்டார்.

★ ★ ★

**மாண்புமிகு முதலமைச்சர்**

# கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்

**19, 20 - 6 - 2008 ஆகிய நாட்களில்**

**நடைபெற்ற மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும்**

**காவல்துறை அதிகாரிகள் மாநாட்டின்**

**இறுதியில் ஆற்றிய உரை வருமாறு:**

இரண்டு நாட்களாக உங்களையெல்லாம் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பினைப் பெற்று – நீங்கள் வழங்கிய அரிய ஆலோசனைகள் – அரசின் சார்பாக நிறைவேற்றப்படுகின்ற வளர்ச்சித் திட்டங்கள் ஆகியவைகளைப் பற்றி நீங்கள் அளித்த ஆய்வுரைகள் – நடைபெற்றுள்ள பணிகள் இன்னும் எப்படியெல்லாம் அந்தப் பணிகள் நடைபெற வேண்டுமென்ற முறைகள் – இவைகள் அனைத்தையும் விரிவாக, விளக்கமாகப் பேசியிருக்கின்றோம். ஏதோ ஆண்டுக்கு ஒரு முறை அல்லது இடையிலே கூட இது போன்ற மாநாடுகள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் கூடி நடத்துவதும் – அதிலே எடுக்கின்ற முடிவுகள், மாநாட்டுக் கூடத்தை விட்டு வெளியேறியதும் மறந்து போவதுமான ஒரு நிலை இருத்தல் ஆகாது என்பதை நான் ஒவ்வொரு முறையும் இந்த மாநாடு நடைபெறும்போதெல்லாம் வலியுறுத்தி நினைவுபடுத்தியிருக்கிறேன்.

என்னைப் பொறுத்தவரையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் – காவல் துறை அதிகாரிகளை என்னுடைய ஆட்சிக் காலத்தில் ஒரு முறை, இரு முறை சந்தித்தவன் அல்ல, பலமுறை உங்களையெல்லாம் சந்தித்துக் கொண்டிருப்பவன்.

அதனால் தான் நாம் இன்றைக்கு தீர்மானிக்கின்றவைகளை – திட்டமிட்டவைகளை நிறைவேற்றிட வேண்டுமென்ற அக்கறையோடு இந்த நாமக்கல்லார் மாளிகையை விட்டு வெளியேற வேண்டுமென்றும் – அதன் பிறகு நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளின் அடிப்படையில் தீட்டப்பட்டுள்ள வளர்ச்சித் திட்டங்களோடு ஒன்றிக் கலந்து ஓய்வின்றி உழைத்திட வேண்டுமென்பதும் – நம்முடைய இலட்சியங்களாக இருக்க வேண்டும்.

இந்த அரசு மிகச் சாதாரணமானவர்களால் – சாமான்ய மானவர்களால் நடத்தப்படும் அரசு என்பதால்; விவசாயிகளின் நலன், ஆசிரியர்களின் நலன், அரசு ஊழியர்களின் நலன், மகளிர் நலன், முதியோர் நலன், உடல்ஊனமுற்றோர் நலன், அமைப்புச் சாரா தொழிலாளர் நலன் ஏன், நரிக்குறவர் நலன், அரவாணிகள் நலன் என்றெல்லாம் எல்லா திசைகளிலும் கவனத்தைச் செலுத்தி அவர்களுடைய நல்வாழ்வுக்கான திட்டங்களைத் தீட்டுவதற்கு முற்படுகின்ற ஓர் அரசாக இருக்கின்றது என்பதை நீங்கள் அறிவீர்கள். தமிழகத்தின் எல்லாத் திசைகளிலும் அரசு எவ்வளவு அக்கறையோடு நான் குறிப்பிட்ட இந்தப் பட்டியலிலே உள்ள மக்களை, பாட்டாளிகளை பரிவோடு கவனிக்கிறது என்பதைப் புரிந்து கொண்டிருக் கிறீர்கள்.

உங்களையெல்லாம் இங்கே அழைத்து – நாங்கள் இன்னின்ன திட்டங்களைச் செயல்படுத்த விரும்புகிறோம் என்று சொல்வது மாத்திரமல்ல – அந்தத் திட்டங்கள் நேரடியாக ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒவ்வொரு வட்டாரத்திலும் நீங்கள்

எந்த மக்களோடு பழகிக் கொண்டிருக்கின்றீர்களோ – எந்த மக்களோடு இணைந்து வாழ்கிறீர்களோ – அந்த மக்கள் இந்தத் திட்டத்தின் பலனை துய்த்திட வேண்டும், அதற்கு நீங்கள் உழைத்திட வேண்டுமென்பதை எடுத்துச் சொல்லவே – வேண்டிக் கொள்ளவே உங்களையெல்லாம் இங்கே அழைத்து, சில கருத்துகளை வெளியிட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றது.

திட்டங்களைச் செயல்படுத்தி – அதன்மூலம் திட்டங்களின் அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றி – பலன்களை உரியவர்களுக்கு நேரடியாக வழங்கிடும் அரிய பொறுப்பை மாவட்ட ஆட்சித் தலைவர்களாகிய நீங்கள் ஏற்றிருக்கிறீர்கள். ஏற்று தொடர்ந்து நிறைவேற்றியும் வருகிறீர்கள் என்பதை நான் மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உள்ள நிறைய பொறுப்புகள் – வழங்கப்பட்டுள்ள புதிய பொறுப்புகள் அவைகளை அதிகாரங்கள் என்று கூடச் சொல்லலாம் – அந்த அதிகாரங்களை – அதிகாரத் தோரணையில் மக்கள் மீது செலுத்துவதில் மகிழ்ச்சி கொள்ளாமல் – அவற்றை மக்களுடைய வாழ்வைச் செம்மைப்படுத்திட, மக்களுக்குக் கைகொடுத்து உதவிட – பயன்படுத்திட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் மக்களாட்சியின் மாண்பு சாதாரண பொதுமக்களுக்கும் தெரியும். அவர்களால் அந்த மாண்பினை உணரவும் முடியும்.

ஆட்சி எனும் தேருக்கு அச்சாணியாகவும், சக்கரங்களாகவும் திகழ்பவர்கள் அதிகாரிகள்தான். அவர்கள்

முழுமையாக இயங்காவிட்டால் மன நிறைவாக இயங்கா விட்டால், ஆட்சித் தேர் ஒரு அங்குலம் கூட நகராது என்பதை நான் மிக நன்றாக அறிவேன். என்னுடைய அரசியல் அனுபவத்திலும், ஆட்சி அனுபவத்திலும் இதை நான் மிகத் தெளிவாக உணர்ந்து கொண்டிருப்பவன். உங்களுடைய வாழ்க்கையில் மாவட்ட ஆட்சித் தலைவர் பொறுப்பு என்பது மகத்தானது என்பதை நான் விளக்கிட வேண்டிய அவசியமில்லை. ஏனெனில், மாவட்ட ஆட்சித் தலைவர் பொறுப்பை வகிக்கும் போதுதான் நேரடியாக மக்களுக்கு நன்மைகளைச் செய்து, அந்த நன்மைகளின் காரணமாக அந்த மக்கள் மன நிறைவடைவதைக் கண்டுகளித்திட முடியும்.

அன்னசத்திரம் ஆயிரம் கட்டுவதைக் காட்டிலும், ஆலயங்களை நிர்மாணிப்பதைக் காட்டிலும், ஓர் ஏழைக்கு எழுத்தறிவைப் புகட்டுவது உயர்ந்தது, புனிதமானது என்று மகாகவி பாரதியார் சொன்னார். அதைப்போல, ஒவ்வொரு நாளும் ஒரு ஏழைக்காவது உருப்படியான ஓர் உதவியைச் செய்திட வேண்டும் என்ற இலக்கை உங்களுக்கு நீங்களே நிர்ணயம் செய்துகொண்டால் அது எவ்வளவு நலன் பயக்கும் என்பதை நான் சொல்லி, புதிதாக விளக்க வேண்டிய அவசியமில்லை.

30.7.2007 மற்றும் 31.7.2007 ஆகிய இரு நாட்களில் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் மொத்தம் 27 முடிவுகள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றில் 18 முடிவுகள் நிறைவேற்றப்பட்டு; 9 முடிவுகள் செயலாக்கத்தில் இருந்து வருவதாக எனக்குப் புள்ளி விவரம் தரப்பட்டுள்ளது. நான்

இந்த 18 முடிவுகள் நிறைவேற்றப்பட்டதைப் பற்றி மகிழ்ச்சியடையவில்லை, இன்னும் 9 முடிவுகள் செயலாக்கத்தில் இருக்கிறதே, நிறைவேற்றப்படாமல் என்ற கவலை – அந்த 18 முடிவுகள் நிறைவேற்றப்பட்டதால் ஏற்படுகின்ற மகிழ்ச்சியைப் பின்னுக்குத் தள்ளிவிட்டது என்பதை சொல்லாமல் இருக்க முடியாது.

இந்த மாநாட்டிலும் பல முடிவுகள் – நீங்கள் வழங்கிய அரிய ஆலோசனைகளுக்குப் பின்னர் – மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த முடிவுகளையும் எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக நீங்கள் நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சட்டம்–ஒழுங்கைப் பாதுகாப்பதில் மாவட்ட ஆட்சியர்களும், காவல் கண்காணிப்பாளர்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டு வரவேண்டும். செயல்படுவது இப்போது பாராட்டுக்குரியதாகத் திகழ்கிறது என்பதை நான் மறைப்பதற்கில்லை. இந்த ஒருங்கிணைப்பு மேலும் வலுப்பட வேண்டும். இருவருக்குமிடையே உள்ள தகவல் பரிமாற்றம் தங்குதடையின்றி நடைபெறுதல் வேண்டும்.

அன்றாடம் நடக்கும் ஒவ்வொரு சாலை விபத்தும் என்னைப் பெரிதும் பாதிக்கின்ற காரணத்தினால் சாலை விபத்துகளைக் குறைப்பதிலும், அவற்றைத் தவிர்ப்பதிலும் தனிக்கவனமும் தொடர் முயற்சியும் தேவை என்பதை நேற்றைக்கு நீண்ட நேரம் உங்களிடம் விளக்கியிருக்கிறேன். வேண்டுகோளாகவும் வைத்திருக்கிறேன். ஆங்காங்கு

ஒவ்வொரு பகுதியிலும் மாவட்டத்திலே உள்ள அதிகாரிகள், பொறுப்பு வாய்ந்தவர்கள், இவர்களையெல்லாம் அழைத்து, அங்கே எப்படியெல்லாம் சாலைகளில் விபத்துகள் ஏற்படாமல் தவிர்க்க முடியும், மக்களுடைய உயிரைப் பாதுகாக்க முடியும் என்பதற்கேற்ப பணிகளை நிறைவேற்றவும், அதற்கு அரசின் துணை, அதிகாரிகளின் துணை வேண்டுமானால், எப்படிப்பட்ட துணை என்பதைக் கேட்டுப் பெறவும் நீங்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரையும் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

சமூக விரோதிகள், அத்தியாவசிய உணவுப் பொருள் களைக் கடத்துபவர்கள், கள்ளச் சந்தைக்காரர்கள், சட்டம்–ஒழுங்கைக் கெடுப்பவர்கள் யாராக இருந்தாலும் பாரபட்சமின்றி துணிச்சலோடு நடவடிக்கை மேற்கொண்டு, அத்தகையவர்கள் கொட்டத்தை அடக்கியே தீர வேண்டும்.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டம், உழவர் சந்தைத் திட்டம், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் திட்டம், ஆதிதிராவிடர், பழங்குடியினர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர்க்கான திட்டங்கள் மற்றும் நலிந்த பிரிவினர்க்கான நலத் திட்டங்கள் அனைத்திலும் மாவட்ட ஆட்சியர்கள் மிகுந்த ஈடுபாடு காட்டி, அந்தத் திட்டங்கள் முழுமையாக வெற்றி பெறுவதற்கு, சலியாது உழைத்திட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இத்தகைய பணிகளைச் செய்வதில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குள் ஆரோக்கியமான போட்டி மனப்பான்மை

வேண்டும். இதை நீங்கள் கோடிட்டு உங்கள் உள்ளங்களில் பதிய வைத்துக் கொள்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.

தினமும் பத்திரிகைகளைப் படிப்பதிலும்; மாவட்ட நிர்வாகத்தைப் பற்றி வெளிவரும் செய்திகளைப் படித்து – நடவடிக்கை எடுக்க வேண்டிய செய்திகள் இருந்தால் உடனடியாக நடவடிக்கை எடுத்து – மேற்கொண்ட நடவடிக்கை பற்றிய குறிப்பினை பத்திரிகைகளுக்கு அறிவிப்பதிலும் – மாவட்ட ஆட்சியர்கள் தொடர்ந்து தங்களுடைய பணிகளை ஆற்ற வேண்டும்.

காலையில் பேசிய மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் குறிப்பிட்டார் – அங்கே மதுரை மாவட்டத்தில் வைக்கப்பட்ட தீண்டாமை சுவர் காரணமாக எழுந்த பிரச்சினை – இரு சாராரிடையே மோதல் உருவாகுமோ என்ற கலக்கம், அச்சம், பீதி அதனால் ஏற்பட்ட பதற்றம் – இந்தச் சூழலில் என்ன செய்வது என்று அவரும் திகைத்துக் கொண்டிருந்த போது நான் எத்தனை முறை அவரோடு தொடர்பு கொண்டேன் தொலைபேசியிலே என்பதும் – நான் தொலைபேசியிலே தொடர்பு கொண்ட நேரத்தில் எல்லாம் நான் கூறிய அறிவுரைகளையேற்று அவர் அங்கே பணியாற்றியதும், அதன் காரணமாக அங்கே ஒரு சுமூகமான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதும் நீங்கள் எல்லாம் அறியாத ஒன்றல்ல.

அப்படி ஒவ்வொரு பிரச்சினை உருவாகின்ற நேரத்திலும் அதை உடனடியாக தெரிவிக்க வேண்டியவர்களுக்கு தெரிவித்து – அதை உடனடியாக சுமூகமாகத் தீர்த்து வைக்கின்ற அந்தக் காரியத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மேலும்

மேலும் அக்கறை காட்ட வேண்டும், தொடர்ந்து அக்கறை காட்ட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தெரிவித்துள்ள கருத்துகள் எல்லாம் தலைமைச் செயலாளர் மூலமாக – முடிவாக இதைக் குறித்து என்ன செய்யலாம், எப்படி அணுக லாம் என்ற வகையிலே பதிவு செய்யப்பட்டிருக்கின்றன, ஒவ்வொரு துறையின் செயலாளரும், அதைப் பதிவு செய்திருக் கிறார்கள், அவைகளை எல்லாம் அமைச்சர்கள் பார்த்து – நானும் பார்த்து ஏற்ற வகையிலே நடவடிக்கைகள் எடுக்கப் படும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தின் சார்பாகச் சொல்லப்பட்ட அந்தக் கருத்து அலட்சியப்படுத்தக் கூடியதல்ல. அந்த மாவட்டத்தின் ஆட்சித் தலைவர் – பெண்களுக்கு மாதந்தோறும் தரப்படுகின்ற உதவித் தொகை இவர்களுக்கும் தரப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்தார் – அந்தக் கோரிக்கை உங்கள் முன்னிலையிலேதான் ஆராயப்பட்டது. அது பற்றி நான் நிதித் துறை செயலாளரை அழைத்து, விளக்கத்தை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்டு, அதை ஓர் அறிவிப்பாக செய்யவுள்ளேன். இந்தக் கூட்டத்திலும் ஏதோ ஓர் அறிவிப்பு வந்தது என்று இல்லாமல் ஒரு முக்கியமான அறிவிப்பு, சமுதாயத்திலே ஒரு பாகமாக இருக்கின்ற பெண்களைப் பற்றிய அறிவிப்பாக அது அமைந்திருக்கின்றது. அதைப் படிக்கின்றேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரையினை யேற்று – வாய்ப்பு வசதியற்று திருமணம் ஆகாமலே ஐம்பது வயதை எட்டி – உழைத்துச் சம்பாதித்து வாழ்க்கை நடத்த இயலாத ஏழையெளிய மகளிருக்கு முதியோர், விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு இப்போது வழங்கப்படுவதைப் போல – இவர்களுக்கும் மாதந்தோறும் உதவித் தொகையாக 400 ரூபாய் வழங்கப்படும் என்ற அறிவிப்பை இங்கே நான் தெரிவித்து இரண்டு நாட்கள் இந்தச் சிறப்பான மாநாட்டிலே கலந்து கொண்டு நாம் ஆற்ற வேண்டிய பணிகளைப் பற்றி ஆய்வு செய்து நல்ல முடிவுகளை எடுத்து ஒத்துழைத்த உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பார்ந்த இதயமார்ந்த நன்றியினைத் தெரிவித்து இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கிறேன்.

★ ★ ★

